
GEOGRAPHY
OF
THE MADRAS PRESIDENCY.

Fourth Edition, 3,000—Total Copies, 9,000.

சென்னை சமஸ்தானத்தின்

பூமிசாஸ்திரம்.



MADRAS:
THE CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY.
S. P. C. K. PRESS, VEPERY.

1888.

THE M

FOURT

செ

பூமி

THE CH

GEOGRAPHY

OF

THE MADRAS PRESIDENCY.

FOURTH EDITION, 3,000—TOTAL COPIES, 9,000.

சென்னை சமஸ்தானத்தின்

பூமிசாஸ்திரம்.



MADRAS:

THE CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

1888.

S. P. C. K. Press, Vepery, Madras. 1888.

சென்னை சமஸ்தானத்தின்

பூமிசாஸ்திரம்.

பீடிகை.

நாம் வாசம்பண்ணுகிற உலகத்திற்கு பூமி என்று பெயர். பூமியைப்பற்றிச் சொல்லுகிறதுதான் பூமிசாஸ்திரம்.

பூமியானது பந்தைப்போல் உருண்டைவடிவுள்ளது. அதின் சுற்றளவு 25,000 மைல், குறுக்களவு 8,000 மைல்.

ஒருமணிநேரம் மூன்றுமைல் வீதம் ஒரு மனுஷன் இரவும் பகலும் பிரயாணம்பண்ணுவானாகில் அவன் பூமியைச் சுற்றிவர கொஞ்சம் குறைய ஒரு வருஷம் செல்லும்.

பூமி ஒன்றின்மேலும் நிற்கிறதில்லை. அது சந்திரனைப்போல அந்தரத்தில் நிற்கிறது.

பூமி 24 மணிநேரத்துக்கொருதரம் தன்னைத்தானே சுற்றுகிறது; இதினால்தான் இராப்பகல் உண்டாகிறது.

சூரியனுக்கு எதிராய் இருக்கிற பூமியின் ஒரு பாதிக்குப் பகல்; மறு பாதிக்கு இரவு.


பூமியானது $365\frac{1}{4}$ நாளுக்குள் சூரியனைச் சுற்றிவரும்; இதுதான் ஒரு வருஷம்.


பூமியின் பரப்பு சில இடங்களில் நிலமும் சில இடங்களில் நீருமாய் இருக்கிறது. கொஞ்சங்குறைய நீர் முக்கால்பங்கு, நிலம் கால்பங்கு.

பூமி முழுவதையும் அல்லது ஒரு பங்கை சித்திரித்துக்காட்டுவதுதான் *பூமிபடம். தலைப்பக்கம் வடக்கு; அடிப்பக்கம் தெற்கு; வலதுபக்கம் கிழக்கு; இடதுபக்கம் மேற்கு. இந்த நாலுக்கும் திக்குகள் அல்லது திசைகள் என்று பெயர்.

---

* உபாத்தியாயர் தம்முடைய பள்ளிக்கூடத்தைப்போல் ஒரு படம் வரைந்து பிள்ளைகளுக்குக் காட்டி அடுத்த இடங்களையும் பிறகு அதோடு சேர்த்து விளக்கவேண்டும். அப்பால் பள்ளிக்கூடம் இருக்கும் ஊரையும் ஜில்லாவையும் தேசத்தையும் கடைசியில் கண்டத்தையும் உலகம் முழுவதையும் இவ்வாறே விளக்கிக்காட்டுவது இலேசாய் இருக்கும்.





நிலப் பிரிவுகள்.

அநேக தேசங்கள் அடங்கிய விஸ்தாரமான பெரு நிலத்துக்குக் கண்டம் என்று பெயர்.

முழுவதும் நீர்சூழ்ந்த நிலத்துக்கு தீவு என்று பெயர்.

கொஞ்சம் குறைய நீர்சூழ்ந்த நிலத்துக்கு தீபகல்பம் என்று பெயர்.

கடலுக்குள் ஒடுங்கி நீண்டிருக்கும் நிலத்துக்கு முனை என்று பெயர்.

மிகவும் அதிகமாய் உயர்ந்திருப்பது மலை என்னப் படும். கொஞ்சமாய் உயர்ந்திருப்பது குன்று என்னப் படும்.


எங்கும் தட்டையாய்ச் சற்றே உயர்ந்திருக்கும் நிலத்துக்குச் சமபூமி என்று பெயர்.

கடலையடுத்த நிலந்தான் கரை.

நீர்ப் பிரிவுகள்.

உப்புநீர் திரண்ட விஸ்தாரமான பாகத்துக்குச் சமுத்திரம் என்று பெயர்.

குடகோளார்த்தம். குணகோளார்த்தம்.



உலகபடம்.

சமுத்திரத்திலும் சிறியது கடல் என்னப்படும்.

பூமிக்குள் வளைந்து செல்லும் கடல் குடாக்கடல்.

முழுவதும் நிலம் சூழ்ந்த ஜலப்பிரிவுதான் ஏரி.

இரண்டு கடல்களை இணைக்கும் வாய்க்கால்தான் ஜலசந்தி.

நல்லஜலம் பாயும் நீரோட்டம் ஆறு என்னப்படும்.

பூமியுண்டையானது இரண்டு பாதி ஆகும். இவைகளுக்குக் குணகோளார்த்தம் குடகோளார்த்தம் என்று பெயர்.

குணகோளார்த்தத்தைச் சேர்ந்த விஸ்தாரமான நிலம் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்கிற கண்டங்களாகப் பிரிந்திருக்கிறது.

குடகோளார்த்தத்தைச் சேர்ந்த விஸ்தாரமான நிலம் வட அமெரிக்காவென்றும் தென் அமெரிக்காவென்றும் இரண்டு பாகமாய்ப் பிரிந்திருக்கிறது.

குணகோளார்த்தத்தில் உள்ளவர்களுக்கு அமெரிக்கா என்னும் கண்டம் நானூறு வருஷங்களுக்கு முன்னே தான் தெரியவந்தமையால் அது உத்தரலோகம் என்றும் சொல்லப்படும். மற்ற மூன்று கண்டங்கள் அடங்கியது பூர்வலோகம்.

பெருஞ்சமுத்திர (Pacific.) த்திலுள்ள தீவுகள் எல்லாம் ஏகத்துக்கு ஓஷியானியா என்று சொல்லப்படும்.

பெருநிலப்பிரிவுகளாகிய இவ்வாறில் நாம் வசிக்கிற ஆசியாக்கண்டந்தான் ஜனத்தொகைகொண்ட மகா விஸ்தாரமான கண்டம்.

கண்டங்களில் ஐரோப்பா மிகச் சிறிதாயினும் ஜனத் தொகையில் ஆசியாவுக்கு இரண்டாவது.

பூமியைச் சூழ்ந்திருக்கும் ஜலமானது ஐந்து பெரிய பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் மிகவும் விஸ்தாரமானது பசிபிக் சமுத்திரம். இது ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ளது. பூமியிலுள்ள நிலத்தை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் இந்த சமுத்திரத்திற்கு வெகு சிறிதாய் இருக்கும்.

ஆசியாவுக்குத் தெற்கே இருப்பதுதான் இந்துசமுத்திரம்.

அத்லாந்திக் சமுத்திரமானது அமெரிக்காகண்டத்தை ஐரோப்பா ஆப்பிரிக்காகண்டங்களிலிருந்து பிரிக்கிறது. பருமனில் இது பசிபிக் சமுத்திரத்துக்கு இரண்டாவது.

வடக்கேயும் தெற்கேயும் உள்ள சமுத்திரங்களுக்கு வடசமுத்திரம் தேன்சமுத்திரம் என்று பெயர். கொஞ்சம் குறைய அதுகள் உறைபனி மூடியிருக்கும். ஆகையால் அங்கே குளிர் மிகுதி.

இந்துதேசம்.

நாம் வாசம்பண்ணுகிற இந்தியாவானது ஆசியாவில் தெற்கிலுள்ள ஒரு பெரிய தேசம். இதின் வடக்கெல்லை இமாலய பருவதம்; கிழக்கெல்லை பர்மாதேசமும், பங்காளக் குடாக்கடலும்; தெற்கெல்லை இந்து

சமுத்திரம்; மேற்கெல்லை அரபியாக்கடல், பெலுச்சிஸ்தான், ஆப்கானிஸ்தான் என்னும் தேசங்கள்.

தெற்கு வடக்காக இதின் நீளம் ஏறக்குறைய 1,800 மைல்; கிழக்கு மேற்காக இதின் கூடின அகலம் ஏறக்குறைய நீளத்திற்கு ஒத்திருக்கிறது. இதின் பரப்பு ஏறக்குறைய 15 லக்ஷம் சதுரமைல்.

உலகம் முழுவதிலுமுள்ள நிலத்தோடு இந்தியாவின் மேல்பரப்பை ஒத்துப்பார்த்தால் ரூபாய்க்கும் அரை அணுவுக்கும் இருக்கும் வித்தியாசம்போலாம்.

இந்தியாவின் ஜனத்தொகை ஏறக்குறைய 25 கோடி. இவர்கள் பல ஜாதியாராய்ப் பல பாஷைகளைப் பேசிவருகிறார்கள். உலகத்திலுள்ள ஜனங்களில் ஆறில் ஒருபங்கு இந்துதேசத்தார்.

கொஞ்சம் குறைய இந்த தேசம் முழுவதும் இங்கிலாந்துதேசத்து இராணியினுடைய ஆதீனத்துக்குட்பட்டிருக்கிறது. அந்தப் பிராட்டியார் அவர்கள் இந்தியாவின் இராக்கினி என்னும் பட்டம்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழாக இந்தியாவை ஆண்டுவரும் பெரிய கவர்னர் துரைக்கு ராஜபிரதிநிதி என்று பெயர்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குட்பட்ட முக்கிய பாகங்கள் எவையென்றால்:-வடக்கே பங்காள சமஸ்தானம், மேற்கே பம்பாய் சமஸ்தானம், தெற்கே சென்னை சமஸ்தானம்.

பங்காள சமஸ்தானம் மூன்று பெரிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு பிரதி கவர்னர் துரை

யால் ஆளப்பட்டுவருகிறது: — இவை எவையெனில், கீழ்மாகாணம்; இதற்குப் பிரதானபட்டணம் ஊக்லி ஆற்றின் ஓரத்தில் இருக்கும் கல்குத்தா நகரம். இந்தியா தேசத்துக்கு இதுதான் ராஜதானி.

வடமேற்கு மாகாணமும் அயோத்தியாநாடும் சேர்ந்த நடுமாகாணம். இதற்குப் பிரதான நகரம் அலகபாத். இது கங்கைநதியும் யமுனைநதியும் சங்கமம்ஆகும் இடத்தில் உள்ளது.

பஞ்சாப் மாகாணம். ராவி ஆற்றுக்குச் சமீபமாயுள்ள லாகோர் பட்டணம் இதற்குத் தலைநகரி.

பம்பாய் சென்னை என்னும் சமஸ்தானங்களை கவர்னர் துரைகள் ஆண்டுவருகிறார்கள்.

மேல்கரையிலுள்ள பம்பாய் பட்டணம் பம்பாய் சமஸ்தானத்துக்குத் தலைநகரி. இது ஒரு பெரிய பட்டணமாய் இருப்பதும் அன்றி, கப்பல் ஒதுங்குவதற்கேற்ற நல்ல துறையுமுள்ளது.

கிழக்கே பர்மா என்னும் மாகாணமும் நடுவேயுள்ள மத்திய நாடுகளும் பிரதான கமிஷனர்கள் என்று சொல்லப்பட்டவர்களுடைய விசாரணைக்குட்பட்ட பெரிய மாகாணங்கள்.

அநேக சுதேச ராஜ்யங்களும் இங்கிலீஷ்காரருடைய ஆதரவுக்குட்பட்டிருக்கிறது. இதுகளில் மிகவும் பெரியது சென்னை சமஸ்தானத்துக்கு வடக்கேயுள்ள நைஜாம் என்பவருடைய ராஜ்யம்.

சென்னை சமஸ்தானம்.

எல்லைகள்.-சென்னை சமஸ்தானம் இந்தியாவின் தென்பாகத்தில் உள்ளது. இதின் வடக்கெல்லைகள் மைசூர் ராஜ்யம், நைஜாம் ராஜ்யம், மத்திபமாகாணங்கள், ஒரிசா நாடு. கிழக்கெல்லை பங்காளக்குடாக்கடல். தெற்கெல்லை இந்துசமுத்திரம். மேற்கெல்லை அரபியாக்கடல்.

சுதேச ராஜ்யங்களாகிய திருவிதாங்கோடு கொச்சி இவைகள் தென்மேற்குக் கரையில் இருக்கிறது.

இந்த சமஸ்தானத்தின் நீளம் அதிகமாய் நீண்டிருக்கும் இடத்தில் ஏறக்குறைய 950 மைல். அதிகமாய் அகன்றிருக்குமிடத்தில் இதின் அகலம் ஏறக்குறைய அதில் பாதியாகும். சுதேச ராஜ்யங்களை நீக்கி இதின் பரப்பு ஏறக்குறைய 1,38,000 சதுரமைல். சென்னை ராஜதானி இந்தியாவில் பதினொரு பங்கில் ஒன்றாகும்.

முனைகள்.—தெற்குக்கோடியில் உள்ளது கன்னியாகுமரி என்னும் முனை; கோடிக்கரை என்னும் முனை தஞ்சாவூர் ஜில்லாவின் தென்கேயுள்ளது.

பரப்பு.—முக்கியமான மலைத்தொடர்கள், மேல்காத்து, கீழ்காத்து மலைகள்தான். இவைகள் இரண்டும் நீலகிரியில் வந்து ஒன்றாய்ச் சேரும். யானைமலையும் பழனிமலையும் மேல்காத்திலிருந்து கிழக்குமுகமாய்ப் பிரிந்துபோம் தொடர்மலைகளாம். சேர்வராயமலை சென்னபட்டணத்துக்குத் தென்மேற்கேயுள்ள தனிமலைத்தொடர்.

நீலகிரி மலைகளில் டோடபேற்ற (பெரியகுன்று) என்னும் சிகரம்தான் அதிக உயரமானது. இது சமுத்திரமட்டத்துச்கு மேல் 8,760 அடி உயரம். இதுவரையில் தெரிந்தமட்டும் தென் இந்தியாவில் அதிக உயரமான சிகரம் யானைமலைத்தொடரில் உள்ளது. இதின் உயரம் சமுத்திரமட்டத்துக்குமேல் 8,837 அடி. நகரிமலை சென்னபட்டணத்துக்கு வடமேற்கேயுள்ள சிறுமலைத்தொடர்.

டெக்கானைச் சேர்ந்த மேட்டுப்பாங்கான சமநிலத்தில் ஒரு பங்கு இந்த சமஸ்தானத்தில் சேர்ந்திருக்கிறது. அதில் முக்கியமாய் உள்ளது காத்மலைகளுக்கும் கடலுக்கும் மத்தியிலுள்ள நாடுகள்தான். வடபாகம் தவிர கீழ்ச்சமுத்திரக்கரை சாதாரணமாய் சமநிலம்.

ஆறுகள்.—மேல்காத்துமலைகள் கடலுக்கு 40 மைல் தூரத்தில் தொடர்ச்சியாய் வருகிறது; இதினால்தான் மேற்குக்கரையிலுள்ள ஆறுகள் அநேகமாய் இருந்தாலும் நீண்டவைகள் அல்ல. மேற்கேயிருந்து கீழ்ப்பக்க சரிவு அதிகம். இதுகாரணத்தால் .இந்த சமஸ்தானத்திலுள்ள பெரிய நதிகள் மேற்கேயிருந்து கிழக்கு முகமாய் ஓடி பங்காளக் குடாக்கடலில் விழுகிறது.

வடக்கேயுள்ள கோதாவரி, கிஷ்ணா நதிகள்தான் பெரியநதிகள்; வடபெண்ணை, பாலாறு, தேன்பெண்ணை, காவேரி, இவைகள் சமஸ்தானத்தின் மத்தியிலுள்ளது. வைகையும், தாம்பிரபரணியும் தெற்கே கடலில் சங்கமமாகிறது.

கோதாவரி ஆற்றின் நீளம் 900 மைல். கிஷ்ணா ஆற்றின் நீளம் 800 மைல். இதற்குத் துங்கபத்திரா என்று சொல்லப்

பட்ட ஒரு உபநதி உண்டு. 470 மைல் நீளமான காவேரி ஆறு கிஷ்ணுவுக்குத் தெற்கேயுள்ள நதிகளில் மிகவும் பெரியது. கோதாவரி, கிஷ்ணு, காவேரி இம்மூன்று நதிகளுக்கும் *டெல்ற்ரு நிலங்கள் உண்டு. காவேரியிலிருந்து பிரிந்து வடக்கே சமுத்திரத்தில் பாயும் உபநதிக்குக் கோள்ளிடம் என்று பெயர்.

சீதோஷ்ணஸ்திதி.—இந்தியாமுழுவதிலும் சென்னை சமஸ்தானந்தான் அதிக உஷ்ணமுள்ளது. டெக்கானில் மேட்டுப்பாங்கான நிலத்திலுள்ள நாடுகளுக்கு மழை பூஜ்யம். மேற்குச் சமுத்திரக்கரையில் மழை அதிகம். தெற்கே வரவர குறைவு.

கீழ்ச்சமுத்திரக்கரையில் பெய்யும் மழை முக்கியமாய் ஈசானிய மூலையில் இருந்துண்டாகும் காற்றால் வருகிறது. மேல்சமுத்திரக்கரையில் பெய்வதோ தென்மேற்குமூலையில் இருந்துண்டாகும் காற்றால் வருகிறது.

தென்மேற்கு மூலைக்காற்றால் அடிக்கப்பட்டு வரும் மேகங்கள் மேல்காத்து மலையில் வந்து தங்கும். இதினால்தான் மேல்காத்து மலைக்குக் கிழக்கேயுள்ள நாடுகளில் அவ்வளவாய் மழை பெய்கிறதில்லை.

விளைவுகள்.—இரும்பு பல இடங்களில் அதிகமாய்க் கிடைக்கும். நீலகிரிக்கு வடமேற்கேயுள்ள வயநாட்டில் பொன் உண்டு. கர்நூல் ஜில்லாவில் இரத்நக்கற்

---

* டெல்ற்ரு என்பது, ஆறு சமுத்திரத்தில் பிரவேசமாகக் கொஞ்ச தூரத்திலிருந்து கிரேக்க எழுத்தாகிய Δ டெல்ற்ருவைப்போல முக்கோணவடிவமாய்ப் பிரிந்தோடுகின்ற முகத்துவார நிலம்.

கள் கிடைக்கும். சமுத்திரத் தண்ணீரைக் காய்ச்சி உப்பு செய்வார்கள்.

கடற்கரையையடுத்த இடங்களில் நெல் பயிராகும். உள்நாடுகளில் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை முதலியவைகள்தான் முக்கியதானியங்கள். எள்ளு, புகையிலை, கரும்பு, வாழை, கிச்சிலி, மாங்காய், முதலியவைகளும் இந்த ராஜதானியில் விளைவாகிறது. சில ஜில்லாக்களில் பருத்தியும் அவுரியும் பயிராகிறது.

மேற்குச்சமுத்திரக்கரையில் தென்னமரங்கள் மிச்சம். மேல்காத்துமலைகளில் காப்பிக்கொட்டை விளையும். காடுகளில் தேக்குமுதலிய மரங்கள் உண்டு.

மாடு, எருமை, ஆடுமுதலிய வீட்டுமிருகங்களுக்குக் குறைவில்லை. யானை, புலி, கரடி, குரங்கு, மான்முதலியவைகள் காடுகளில் உண்டு.

ஜனத்தொகை. — இது ஏறக்குறைய 3 கோடியே 10 லக்ஷம் என்று கணக்கிடலாம். இந்தியாவிலுள்ள ஜனங்களில் எட்டில் ஒருபங்கு சென்னை சமஸ்தானத்தில் இருக்கிறார்கள்.

பாஷைகள். — வடகீழ் நாடுகளில் உள்ளவர்கள் தெலுங்கும், தென்கீழ் நாடுகளிலுள்ளவர்கள் தமிழும், வடமேற்கேயுள்ளவர்கள் கன்னடமும், தென்மேற்கேயுள்ளவர்கள் மலையாளமும் பேசுகிறார்கள்.

கைத்தொழில். — ஜனங்களில் மூன்றில் இரண்டு பங்கு பயிரிடும் குடிகள். வஸ்திரம் நெய்கிறவர்களும் உண்டு. சிலர் அவுரி கரும்பு இவைகளைப் பயிரிடுகி

ஞர்கள். பித்தளைப்பாத்திரம் மட்பாத்திரம் இவைகளைச் செய்கிற தொழிலாளிகளும் உண்டு.

கால்வாய்கள்.—கோதாவரி, கிஷ்ணு, காவேரி முதலிய நதிகளிலிருந்து நீர் பாயும்படியான கால்வாய்கள் அநேகம் வெட்டப்பட்டிருக்கிறது. படவுகள் போக்குவரத்துக்காக வெட்டியிருக்கும் பக்கிங்காம் கால்வாய் சென்னபட்டணத்திலிருந்து வடக்குமுகமாய்ச் சென்று, கோதாவரியிலிருந்து பிரியும் வாய்க்கால்களோடு சேர்ந்துபோகிறது. சென்னபட்டணத்திலிருந்து தெற்குமுகமாய்ப் போகும் வாய்க்கால் பாலாற்றோடு சேர்ந்துபோகிறது.

இருப்புப்பாதைகள்.—சென்னபட்டணத்து இருப்புப்பாதையின் நீளம் 860 மைல். இது மேல்சமுத்திரக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டைமட்டும் போகிறது. இதிலிருந்து சில கிளைப்பாதைகளும் பிரிகிறது. தேன் இந்தியா இருப்புப்பாதை சென்னை ராஜதானியிலிருந்து தூத்துக்குடிமட்டும் போகிறது. இதைச்சேர்ந்த சில கிளைப்பாதைகளும் உண்டு.

வர்த்தகம்.—இந்த சமஸ்தானத்தில் ஏற்றுமதியாகிற சரக்குகள் காப்பிக்கொட்டை, பஞ்சு, தோல்கள், அரிசி, நீலம், பலபல விதைகள், எண்ணெய்கள், வாசனைத் திரவியங்கள், சர்க்கரை. இறக்குமதியாகிற சரக்குகள் ஜவளிகள், அரிசி, உலோகங்கள், லாகிரிப்பானங்கள், பட்டு, பலவித மரங்கள்.

ராஜாங்க வருமானம். — வருஷத்தில் ஏறக்குறைய 10 கோடி ரூபாய் வசூலாகிறது.

மார்க்கம். — ஜனங்கள் மொத்தத்திற்கு இந்துமதஸ்தர். 17ல் ஒரு பங்கு மகமதியர். இந்தியாவின் மற்றப் பங்குகளைவிட இந்த சமஸ்தானத்தில்தான் சுதேசக் கிறிஸ்தவர்கள் அதிகம்.

ஜில்லாக்கள். — சென்னபட்டண சமஸ்தானத்தில் 22 ஜில்லாக்கள் அல்லது கலெக்ற்றர் ஸ்தானங்கள் உண்டு. கீழ்ச்சமுத்திரக்கரையிலுள்ள ஜில்லாக்கள், கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிஷ்ணா, நெல்லூர், சென்னபட்டணம், செங்கற்பட்டு, தென்ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி என்பவைகள். மேல்சமுத்திரக்கரையிலுள்ள ஜில்லாக்கள், மலபார், தென்கன்னடம் என்பவைகள். உள்நாட்டிலுள்ள ஜில்லாக்கள், கர்நூல், பல்லாரி, அநந்தப்பூர், கடப்பை, வடஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, கொயம்பத்தூர், நீலகிரி என்பவைகள்.

ராஜாங்கம். — இந்த சமஸ்தானத்துக்கு அதிகாரி கவர்னர்துரை. இவருக்கு உதவியாக இரண்டு ஆலோசனைச்சபைகள் உண்டு. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு கலெக்ற்றர் மேல் அதிகாரியாக வைக்கப்பட்டிருக்கிறார். நீலகிரி ஜில்லாவை விசாரித்துவருகிறவருக்கு கமிஷனர் என்று பெயர்.

சென்னபட்டணம் செங்கற்பட்டு ஜில்லாக்கள்.

சென்னபட்டணம் ஜில்லா. — இந்த சமஸ்தானத்தில் இதுதான் எல்லா ஜில்லாக்களிலும் சிறியது. சென்னபட்டணமும் அதைச்சேர்ந்த சிற்றூர்களும் அடங்கியது. பட்டணம் கரையோரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கூவம் என்னும் ஆறு அதின் நடுவே பாய்கிறது. அடையாறு அதின் தெற்கெல்லையின் ஓர் பாகம். சென்னைக்கு காப்புஸ்தானம் சென்ற் ஜியோர்ஜ் கோட்டை. அதில் சில பொதுவான பெரிய கட்டடங்கள் உண்டு. அநேகம் கல்விச்சாலைகளும் பல பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. சென்னபட்டணத்திலிருந்து மேல்சமுத்திரக்கரைக்கும் தென்சமுத்திரக்கரைக்கும் இருப்புப் பாதைகளால் போக்குவரத்து இருக்கிறதும் அல்லாமல், கடல்வழியாய் பெருத்த வியாபாரமும் நடந்துவருகிறது. கப்பல்களில் வரும் சரக்கு இறக்குமதியாகிறதற்கு (Peir) பியர் என்று சொல்லப்பட்ட இருப்புப் பாலம் இருக்கிறதோடு கப்பல்கள் ஒதுங்கும்படியான ஒரு துறைமுகமும் கட்டப்பட்டுவருகிறது.

இந்த சமஸ்தானத்துக்குப் பிரதான நகரி சென்னை. தென் இந்தியாவிலுள்ள பட்டணங்களில் இதுதான் பெரியது. இதின் ஜனத்தொகை நாலு லக்ஷம். இவர்கள் பேசும் முக்கியபாஷை தமிழ். தெலுங்கு பேசுகிறவர்களும் அநேகர். எட்டில் ஒரு பங்கு மகமதியர்.

வர்த்தகத்துக்காக இங்கிலீஷ்காரர் இந்தியாவில் கட்டின முதல் வர்த்தகசாலை பொம்பாய்க்கு வடக்கேயுள்ள சூராட்டு என்னும் இடத்தில் 1612-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. இதற்கென்று சென்னையில்தான் சந்திரகிரிராஜா 1639-ம் வருஷத்தில் முதலாவது நிலம் கொடுத்தது.

கீழ்ப்பக்கம்தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் செங்கற்பட்டு ஜில்லா சென்னபட்டணம் ஜில்லாவை ஒட்டிக் கொண்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சில குன்றுகளை நீக்கிவிடுவோமானால் அதை சமநிலம் என்றே சொல்லலாம். அதில் அநேக பெரிய ஏரிகள் உண்டு. முக்கியஸ்தானம் சென்னபட்டணத்துக்குச் சமீபமான சைதாபேட்டை. பாலாற்றுக்குச் சமீபத்திலுள்ள செங்கற்பட்டு முன்னே முக்கியஸ்தானமாய் இருந்தது. தென்மேற்கேயுள்ள காஞ்சிபுரம்தான் இந்த ஜில்லாவில் பெரிய பட்டணம். இது இந்துக்களுடைய தேவஸ்தானங்களால் பேர்பெற்றது. சென்னபட்டணத்துக்குச் சமீபமாயுள்ள இராணுவஸ்தானங்கள் பூந்தமல்லி, பல்லாவரம், பரங்கிமலை என்பவை. பழவேற்காடு சென்னபட்டணத்துக்கு வடக்கே அந்தப் பேர்கொண்ட கழியோரத்திலுள்ளது. ஏழு கோவில் ஸ்தலம் ஆகிய மாவலிபுரம் என்பது சதுரங்கபட்டணத்துக்குச் சமீபமாய் இருக்கிறது. இதில் கற்பாறைகளில் விசித்திரமாய் வெட்டப்பட்ட கோவில்கள் உண்டு.

செங்கற்பட்டு ஜில்லாவில் சாதாரணமாய்ப் பேசுகிறது தமிழ்.

பூர்வ சோழராஜ்யத்துக்குத் தலைநகரி காஞ்சிபுரம்.

சமுத்திரக்கரையோரத்திலுள்ள வடஜில்லாக்கள்.

நெல்லூர்ஜில்லா செங்கற்பட்டுக்கு வடக்கே. கரையோரத்தில் உப்பு விளையும். பட்டணத்தில் சிலவாகும் விறகு முக்கியமாய் இந்த ஜில்லாவிலிருந்துதான் வருகிறது. தானியமும் அவுரியும் இதில் பயிராகிறது. நெல்லூர் ஜில்லாவிலுள்ள ஆடுமாடுகள் மேல்தரமானவை. வடபெண்ணையோரத்தில் உள்ள நேல்லூர்தான் பிரதான பட்டணம். ஒங்கோல் அதற்கு வடக்கே.

நெல்லூர் ஜில்லாவுக்குத் தெற்கே வெங்கிடகிரி என்று சொல்லப்பட்ட பெரிய ஜமீன் உண்டு. தெற்குக்கரையிலுள்ள காடுகளில் ஏனாதிகள் என்று சொல்லப்பட்ட காட்டு ஜனங்கள் வாசம்பண்ணுகிறார்கள்.

கிஷ்ணாஜில்லா நெல்லூர்ஜில்லாவுக்கு வடகிழக்கே. இதின் நடுவே பாய்கிறது கிஷ்ணாநதி. இதிலிருந்து பல வாய்க்கால்கள் பிரிகிறதும் அன்றி இந்த ஆற்றின் டெல்ற்ரா நிலமும் இந்த ஜில்லாவைச் சேர்ந்திருக்கிறது. இது நன்றாய் கிருஷிசெய்யப்பட்ட செழிப்பான நாடு. இதில் பிரதான நகரம் மசுலிபட்டணம் அல்லது மச்சபட்டணம். இதற்குப் பந்தர் என்றும் பெயர். இந்த வார்த்தைக்கு துறைமுகம் என்று அர்த்தம். இது கிஷ்ணாநதியின் முகத்துவாரம் ஒன்றுக்குச் சமீபமாய் உள்ள கடல்துறை பட்டணம். கிஷ்ணாநதி ஓரத்திலுள்ள பேஜவாடாவில் பெரிய அணைக்கட்டு ஒன்றுண்டு. குண்டூர் இதற்குத் தென்மேற்கு.

இதின் கரைபக்கம் பள்ளப்பாங்காய் இருப்பதினால் கடல் பொங்கி பட்டணத்துக்குள் வருகிறதுண்டு. சென்னபட்டணம் கிடைக்குமுன் இங்கிலீஷ்காரர் குடியேறின தாவு மசுலிபட்டணம்.

கோதாவரிநதி பாய்கிற நாடுதான் கோதாவரி ஜில்லா. இந்த ஆற்றின் டெல்ற்ரு நிலம் மிகவும் செழிப்பானது. ஆற்றில் இலங்கை என்று சொல்லப்பட்ட சிறு தீவுகளில் விளைவாகிற புகையிலையால் இதற்குப் பிரசித்தி. தென்மேற்கே ஒரு பள்ளத்தில் கோலார் ஏரி இருக்கிறது. இந்த ஜில்லாவின் பிரதான பட்டணம் கோதாவரி தீரத்திலுள்ள ராஜமயேந்திரம். இதற்குத் தென்மேற்கே கோலார் ஏரி சமீபத்திலுள்ள ஏலூர் என்னும் பட்டணம்தான் எல்லாவற்றிலும் பெரியது. இங்கே ரத்நக்கம்பளம் நெய்வார்கள். கோதாவரியின் வடமுகத்துவாரத்துக்குச் சமீபமாயுள்ள கோக்கநாடா, கோரங்கி என்னும் பட்டணங்களும் தென்முகத்துவாரத்துக்குச் சமீபமான நரசப்பூர் என்னும் பட்டணமும் துறைமுகங்கள்.

ராஜமயேந்திரத்துக்குக் கொஞ்சம் தெற்கே, தவளேஸ்வரம் என்னும் இடத்துக்குச் சமீபமாய் கோதாவரி ஆற்றில் ஒரு பெரிய அணை கட்டியிருக்கிறது. இந்த ஆற்றில் புகைக்கப்பல்கள் போக்குவரத்துண்டு. தவளேஸ்வரம் தொடங்கி கோக்கநாடாமட்டும் ஒரு கால்வாய் வெட்டியிருக்கிறது.

விசாகபட்டணம் ஜில்லா கோதாவரி ஜில்லாவுக்கு வடகிழக்கே. இது மலைநாடு. இதிலுள்ள பல ஜமீன்

களைச் சேர்த்தால் சென்னை சமஸ்தானத்தின் ஜில்லாக்களில் எல்லாம் இதுதான் பெரியது. இதின் பிரதான நகரம் விசாகபட்டணம். இது துறைமுகம். கொம்பு தந்தம் இவைகளால் செய்யப்பட்ட பெட்டிகளுக்குப் பேர்போனது. வடக்கே இருக்கும் பிமுலிபட்டணம் ஒரு துறைமுகம். உள்நாட்டிலுள்ள விஜயநகரம் ராணுவஸ்தானம்.

விசாகபட்டணத்துக்குச் சமீபத்தில் வால்தேர் என்று சொல்லப்பட்ட ராணுவஸ்தானம் ஒன்றுண்டு. விஜயநகரம் ஒரு பெரிய ஜமீன்.

கஞ்சம் ஜில்லா இந்த சமஸ்தானத்தின் வடகோடியிலுள்ளது. இது ஒரிசாநாட்டை அடுத்திருக்கிறது. இதில் ஒரியா ஜாதியார் அதிகம். மலைநாடுகளில் கோதுகள் என்று சொல்லப்பட்டவர்களும் வேறு காட்டுஜனங்களும் வசிக்கிறார்கள். இந்த ஜில்லாவுக்கும் ஒரிசாவுக்கும் நடுவே சில்க்கா ஏரி இருக்கிறது. இந்த ஜில்லாவின் பிரதான நகரம் சித்தர்ப்பூர். இது பூர்வம் பிரதானஸ்தானமாய் இருந்த கஞ்சத்துக்குச் சமீபமாய் வடக்கே உள்ளது. இந்த ஜில்லாவின் பட்டணங்களில் எல்லாம் மிகவும் பெரியது தென்மேற்கில் இருக்கும் பரம்பூர். இதுவும் வடமேற்கில் இருக்கிற ரசூல்கோண்டாவும் ராணுவஸ்தானங்கள். களிங்கபட்டணமும் கோபால்பூரும் துறைமுகங்கள். தெற்கே சிக்காகோல் என்று சொல்லப்பட்டது கொஞ்சம் உள்நாட்டில் தள்ளியிருக்கிறது.

கோதுகள் என்று சொல்லப்பட்டவர்கள் மலைநாட்டார். நல்ல வெள்ளாண்மைக்கு நரபலிசெலுத்துவது ஆவசியகம் என்பது முன்னே இவர்கள் கோட்பாடு.

சில்க்கா ஏரி பழவேற்காட்டு ஏரியைப்போல் இருந்தாலும் அதிலும் மிகப் பெரிது. இது கடலுக்குச் சமீபமாய் இருக்கிறபடியால் இதின் ஜலம் உப்பு. இதில் எங்கும் தண்ணீர் ஆழமே இராது.

வடகோடியிலுள்ள நாலு ஜில்லாக்களும் முன்னே வடசர்க்கார் என்று சொல்லப்பட்டது.

பாஷை.

மேற்சொன்ன ஜில்லாக்களில் முக்கியமாய் வழங்குகிறது தெலுங்கு. விசாகபட்டணம், கஞ்சம் ஜில்லாக்களின் உள்நாட்டில் வசிக்கும் மலைநாட்டார் உரியாவும் வேறு பாஷைகளும் பேசுவார்கள்.

உள்நாட்டு வடஜில்லாக்கள்.

கர்நூல் ஜில்லா நெல்லூருக்கு வடமேற்கே இருக்கிறது. இது தேக்குமுதலிய மரங்கள் விளைகிற மலைநாடு. நிலம் கரிசற்பாங்கானதால் தானியமும் பருத்தியும் விளையும். உஷ்ணம் மிகுதி. துங்கபத்திரை என்னும் ஆற்றிலிருந்து வெட்டியிருக்கும் வாய்க்கால்களால் கழனிகளுக்கு நீர் பாயும். துங்கபத்திரை கரையோரத்திலுள்ள கர்நூல்தான் இதற்கு விசேஷித்த பட்டணம். நடுவே இருக்கும் நந்தியாலும் கிழக்கே இருக்கும் கம்பமும் வேறு பட்டணங்கள்.

கர்நூலின் மேற்குபாகம் முன்னே ஒரு நபாபின் ஆதீனத்துக்குள் இருந்தது.

பல்லாரி என்கிற ஜில்லா கர்நூலுக்குத் தென்மேற்கே இருக்கிறது. இது காங்கையான நாடு. இதில் அநேகம் பெரிய குன்றுகள் உண்டு. சிலதில் பழைய கோட்டைகளையும் காணலாம். மற்ற ஜில்லாக்களைவிட இதில் மழை சொற்பம். பிரதான நகரி பல்லாரி. இதிலுள்ள குன்றின்மேல் ஒரு கோட்டை உண்டு. இது பெரிய ராணுவஸ்தானமாய் இருப்பதும் அன்றி சென்னபட்டணம் இருப்புப்பாதையிலிருந்து இதற்கு ஒரு கிளைப் பாதை பிரிகிறது. ஆதோனி என்னும் பட்டணம் வடகிழக்கே சென்னை இருப்புப்பாதையில் இருக்கிறது.

அநந்தப்பூர் கொஞ்சகாலத்திற்குமுன் ஒரு ஜில்லா ஆயிற்று. முன்னே இது பல்லாரிஜில்லாவைச் சேர்ந்தது. இதின் பிரதான பட்டணம் அநந்தப்பூர். தத்பாத்திரி நகரமும் குன்றுகள்மேல் எழுப்பப்பட்ட கோட்டைகளுள்ள குத்தி நகரமும் வடக்கே சென்னை இருப்புப்பாதையில் இருக்கின்றன.

கடப்பை ஜில்லா அதிக உஷ்ணமானது. இதில் தானியமும் அவுரியும் பயிராகிறது. நிலம் பெரும்பாலும் கரிசல். பிரதான பட்டணமாகிய கடப்பை வடபெண்ணையின் ஓர் உபநதிதீரத்தில் இருக்கிறது. இது ஒரு பள்ளமானதினால் வெகு காங்கையான இடம். தெற்கே காத்மலைகளில் மதுனப்பள்ளி என்று சொல்லப்பட்ட ஒரு ஊர் உண்டு.

வடஆற்காடு செங்கற்பட்டுக்கு மேற்கே இருக்கிற ஜில்லா. நகரிமலைகள் இந்த ஜில்லாவில்தான் இருக்கிறது. இதின் பிரதான பட்டணம் சென்னைக்கு மேற்கேயுள்ள சித்தூர். ஆற்காடு பாலாற்றோரம். இது முன்னே கர்நாடக நபாபுகளுடைய ராஜதானி. மேற்கே பாலாற்றோரத்தில் இருக்கும் வேலூர் எல்லாவற்றிலும் பெரிய பட்டணமாய் இருக்கிறதும் அன்றி ராணுவஸ்தானமாயும் இருக்கின்றது. வடக்கே சென்னை இருப்புப்பாதையில் இந்துக்களுடைய புண்ணியஸ்தலமாகிய திருப்பதி இருக்கிறது.

வேலூருக்குத் தென்கிழக்காயுள்ள ஆரணியில் ஒரு பழைய கோட்டை உண்டு. தென்மேற்கேயுள்ள சாத்தகடி கிச்சிலிப்பழங்களுக்குப் பேர்போனது.

பாஷை.

இந்த ஜில்லாக்களில் வழங்குகிற முக்கிய பாஷை தெலுங்குதான். பல்லாரியின் மேற்பக்கத்தில் உள்ளவர்கள் கன்னடமும் வடஆற்காட்டின் தென்பக்கத்தில் உள்ளவர்கள் தமிழும் பேசுவார்கள்.

தென்சமுத்திரக் கரையிலுள்ள ஜில்லாக்கள்.

தென்ஆற்காடு என்னும் ஜில்லா வடஆற்காட்டுக்கும் செங்கற்பட்டுக்கும் தெற்கே இருக்கிறது. இது சாதாரணமாய் சமநிலமும் மணற்பாங்கும் உள்ளது. இதில் விசேஷமாய் விளைகிறது தானியமும் அவுரியும்

தான். முக்கியபட்டணம் கரையோரத்திலுள்ள கூட்லூர். இதற்குச் சமீபமாய் சேன்ற் டேவிட் என்று சொல்லப்பட்ட ஒரு கோட்டை உண்டு. இப்பொழுது இது இடிந்துகிடக்கிறது. வடமேற்கே செஞ்சி என்று சொல்லப்பட்ட மலைக்கோட்டை ஒன்று உண்டு. பரங்கிப்பேட்டை என்பது தெற்கே கரையோரத்தில் இருக்கிறது. சிதம்பரம் என்னும் ஊர் சற்றே உள்ளே தள்ளி இருக்கிறது. இதில் இந்துக்களுடைய பெரிய தெய்வஸ்தலங்கள் உண்டு.

பிராஞ்சுக்காரருடைய அதிகாரத்துக்குள் இருக்கும் புதுச்சேரி என்னும் பட்டணம் இந்த ஜில்லாவில் சேர்ந்தது.

தென் இந்தியாவில் அதிக செழிப்பும் அதிக ஜனத்தொகை அடங்கியதுமாகிய தஞ்சாவூர் ஜில்லா காவேரி டெல்ற்ரு நிலத்தில் இருக்கிறது. இது நெல்விளையும் பெரிய விஸ்தாரமான கழனிபோலாம். காவேரிதீரத்திலுள்ள இதின் பிரதான பட்டணமாகிய தஞ்சாவூரில் பிரசித்தியான ஒரு தேவஸ்தானம் உண்டு. வடகிழக்கேயுள்ள கும்பகோணம் இந்துக்களுக்கு புண்ணியஸ்தலமாய் இருப்பதும் அன்றி ஒரு பெரிய கல்விச்சாலையும் உள்ளது. கரையோரத்தில் இருக்கும் நாகபட்டணத்திலிருந்து அரிசி கடல்வழியாய் இலங்கைக்கு எற்றுமதி ஆகிறது. அதற்குச் சமீபத்திலுள்ள நாகூர் மகமதியர் விஸ்தாரமாய் வாசம்பண்ணும் சிறு துறைமுகம். வடக்கே கடலோரத்தில் முன்னே டேன்ஸ் என்பவர்களு

டைய சுயாதீனத்தில் இருந்த தரங்கம்பாடியும், உள்நாட்டில் சீயாழி, மாயபுரம், மன்னார்குடி என்னும் ஊர்களும் உண்டு.

மதுரை என்னும் பெரிய ஜில்லா தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தென்மேற்கே இருக்கிறது. பழனிமலைகள் இதின் வடமேற்கிலுள்ளது. கடற்கரையோரமாக இந்த ஜில்லா சமநிலமாயும் மணற்பாங்காயும் இருக்கும். இதின் பிரதான பட்டணம் வைகைதீரத்திலுள்ள மதுரை. இது பூர்வம் பாண்டிய ராஜ்யத்தின் தலைநகரி. சங்கத்தார் இருந்த ஸ்தலமாதலால் பேர்போனது. இதில் ஒரு பெரிய தேவஸ்தானமும் இடிந்துபோன ஒரு பெரிய அரண்மனையும் உண்டு. வடமேற்கே திண்டுகல்லில் பழைய கோட்டையுள்ள ஒரு குன்று இருக்கிறது. தென்கிழக்கிலுள்ள இராமநாதபுரம் ஜமீன்களில் எல்லாம் அதிக ஜனத்தொகை அடங்கியது. இராமநாதபுரத்துக்கு வடமேற்கே சிவகங்கை என்று சொல்லப்பட்ட வேறொரு பெரிய ஜமீனும் உண்டு.

சிறுமலைகள் மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் நடுவேயுள்ளது.

மதுரைக்குக் கிழக்கே, தீர்த்தயாத்திரைக்காரர் அதிகமாய்ப் போகிற இராமேஸ்வரம் என்று சொல்லப்பட்ட சிறுதீவு ஒன்றுண்டு. இதற்கும் கரைக்கும் நடுவே உள்ளது பாம்பன் வாய்க்கால்.

திருநெல்வேலி ஜில்லா தெற்கு கடைகோடியிலுள்ளது. மணற்பாங்கானும் தானியமும் பருத்தியும்

கருப்புக்கட்டியும் இதில் அதிகமாய் உண்டு. இந்த ஜில்லாவில் சுதேச கிறிஸ்தவர்கள் அதிகம். அநேகம் பள்ளிக்கூடங்கள் இருப்பதும் அன்றி பெரிதும் அழகுமான சில தேவாலயங்களும் உண்டு. இதின் பிரதான பட்டணம் பாளயங்கோட்டை. இதற்குச் சமீபத்தில் தாம்பிரபாணியின் அக்கரையிலுள்ள திருநேல்வேலிதான் எல்லாவற்றிலும் பெரிய பட்டணம். கிழக்கே கரையோரத்தில் இருக்கும் தூத்துக்குடியிலிருந்து பஞ்சு ஏற்றுமதியாகிறது. காத்மலையின் அடிவாரத்தில் குத்தாலம் இருக்கிறது.

பாஷை.

தென் சமுத்திரக்கரையோரமாய் இருக்கும் இந்த ஜில்லாக்களில் உள்ளவர்கள் முக்கியமாய்த் தமிழ்ப் பாஷை பேசுவார்கள்.

நெல்லூர் முதற்கொண்டு தென்கரையோரமான ஜில்லாக்களும் வடஆற்காடும் திருச்சிறுப்பள்ளியும் சேர்ந்து கர்நாடகம் என்று முன்னே சொல்லப்பட்டது. கோடிக்கரைமுனையிலிருந்து நெல்லூர்வரையும் உள்ள கரை சில சமயங்களில் சோழமண்டலக்கரை என்னப்படும். இதுதான் இங்கிலீஷில் கொறமாண்டல் என்று திரிந்திருக்கிறது.

உள்நாட்டு தென்ஜில்லாக்கள்.

சேலம் ஜில்லா தென்ஆற்காடு வடஆற்காடு ஜில்லாக்களுக்கு மேற்கே வருகிறது. சேர்வராயமலை இதின் நடுவிலும் கீழ்காத்மலைகள் இதின் வடமேற்கிலும் உள்ளது. இந்த ஜில்லா இரும்புக்குப் பேர்போனது. இதில்

விளையும் முக்கிய தானியங்கள் கம்பு கேழ்வரகு. சேர்வராயமலையில் காப்பிக்கொட்டை பயிராகிறது. இந்த மலையின் அடிவாரத்துக்குச் சமீபமாய் இருக்கும் சேலம்தான் இதில் பிரதான பட்டணம். சேர்வராயமலையிலுள்ள ஏர்காட் என்னும் இடத்தில் ஐரோப்பியர் உஷ்ணகாலத்தில் போய் வாசம்பண்ணுவார்கள். திருப்பத்தூர் வடக்கே சென்னை இருப்புப்பாதையில் இருக்கிறது. வடமேற்கேயுள்ள உசூர் மைசூர் ராஜ்யத்துக்குச் சமீபமாயும், நாமக்கல் தெற்கேயுமுள்ள பட்டணங்கள்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா சேலம் தென் ஆற்காடு ஜில்லாக்களுக்குத் தெற்கே இருக்கிறது. இதில் காவேரி ஆறு பாய்கிறது. அந்த ஆற்றின் தீரத்திலுள்ள திருச்சிராப்பள்ளிதான் இதில் பிரதான பட்டணம். இது இராணுவஸ்தானமாய் இருப்பதும் அல்லாமல் சென்னபட்டணத்துக்கு இரண்டாவதாயும் இருக்கின்றது. சுருட்டுக்கும் நகைகளுக்கும் இது பேர்போனது. இந்தப்பட்டணத்துக்குச் சமீபத்தில் தேவஸ்தானங்களுள்ள ஒரு பெரிய குன்றுண்டு. திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்தில் காவேரி ஆற்றில் ஒரு தீவில் இருக்கும் ஸ்ரீரங்கத்தில் விளங்கும் தேவஸ்தானமே, இந்தியாவிலுள்ள சமஸ்த தேவஸ்தானங்களிலும் பெரியது.

கோயம்பத்தூர் ஜில்லா சேலத்துக்குத் தென்மேற்கே இருக்கிறது. இதின் வடமேற்கில் நீலகிரிமலை; தென்மேற்கில் யானைமலை. சோளம், கம்பு, கேழ்வரகு, கொ

ள்ளு, பருத்தி இதுகள்தான் இதில் முக்கியமான விளைவு. சென்னை இருப்புப்பாதையில் இருக்கும் கோயம்பத்தூர் தான் இதில் பிரதான பட்டணம். கோயம்பத்தூரிலிருந்து நீலகிரிமலையின் அடிவாரத்திலுள்ள மேட்டுப்பாளையத்துக்கு ஒரு சிறு கிளை இருப்புப்பாதை போகிறது. பவானிநதியும் காவேரிநதியும் சங்கமமாகிற இடத்திலுள்ள பவானிக்கடல் என்பது தீர்த்தயாத்திரை ஸ்தலம். தெற்கே தாராபுரம் என்னும் ஓர் ஊர் உண்டு. தென்கிழக்கே காவேரிக்கு உபநதியாகிய அமராவதி ஓரத்தில் இருப்பது கருவூர்.

நீலகிரியும் வயநாடும் சேர்ந்த சிறு ஜில்லா ஒரு கமிஷனருடைய விசாரணைக்குள் இருக்கிறது. குளிர்ச்சிக்காக ஐரோப்பியர் அடிக்கடி நீலகிரி மலைகளுக்குப் போவார்கள். இங்கே காப்பிக்கொட்டையும் தேயிலையும் பயிராகின்றது. வடமனுஷர் என்று அர்த்தம்கொள்ளும் படுகர் என்பவர்களும் தோதுவர் என்னும் ஜாதியாரும் இங்கே விசேஷமாய் வாசம்பண்ணுகிற மலைநாட்டார். உத்தகமண்டு என்பதுதான் பிரதான ஸ்தானம். வேனிற்காலத்தில் கவர்னர்துரை வாசம்பண்ணுகிற இடம் இதுதான். இதற்குத் தென்கிழக்கே இருக்கிறது குண்ணூர். உவெல்லிங்றனும் கோத்தகிரியும் இதிலுள்ள வேறு இடங்கள்.

முன்னே மலபாரைச்சேர்ந்த வயநாட்டில் கொஞ்சம் பொன் எடுத்ததுண்டு. இதில் அநேகம் காப்பித்தோட்

டங்களும் இருக்கிறது. இதின் பிரதான ஸ்தானம் மானந்தோடி.

பாஷை.

சாதாரணமாய் இந்த ஜில்லாக்களில் பேசுகிறது தமிழ். மைசூரை ஒட்டின இடங்களில் கன்னடம் பேசுவார்கள். நீலகிரியில் வசிக்கும் மலைநாட்டாருக்குரிய சுயபாஷையும் உண்டு.

மேற்குச்சமுத்திரக் கரையோரத்திலுள்ள ஜில்லாக்கள்.

மேற்குக்கரைக்கு மலபார்கரை என்றும் பெயர். இந்தக் கரையிலுள்ள ஜில்லாக்கள் கிழக்கே மேல்காத்துக்கும் மேற்கே கடலுக்கும் நடுவே இருக்கிறது. இங்கே மழை அதிகமாய்ப் பெய்யும். காடுகளில் தேக்குமரமும் சந்தனமரமும் ஏலக்காயும் உண்டு. முக்கியமாய் விளைவாகிற தானியம் நெல்தான்.

மலபார் ஜில்லா கொச்சிக்கும் தென் கன்னடத்துக்கும் நடுவேயுள்ளது. இங்கே மாப்பிள்ளைகள் என்று சொல்லப்பட்ட மகமதியர் மிச்சமாய் இருக்கிறார்கள். கரையோரத்தில் இருக்கும் கள்ளிக்கோட்டை இதின் பிரதான பட்டணமாயும் சென்னபட்டண இருப்புப் பாதை மேற்கே முடிகிற ஸ்தானமாயும் இருக்கிறது. தெற்கே இருக்கும் கோச்சியில் வர்த்தகம் நடக்கிறது. வடக்கே தலைச்சேரியில் காப்பிக்கொட்டை ஏற்றுமதி

யாகிறது. கன்னனூர் ராணுவஸ்தானம். கிழக்கே பாலகாடு சென்னை இருப்புப்பாதையில் இருக்கிறது.

தென்மேற்குக் கரையிலுள்ள வேளாளர் நாயகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இவர்களுக்குள் இருக்கும் விவாக ஏற்பாடுகள் கற்புநிலைக்கு விபரீதமானவை.

தென்கன்னடம் மலபாருக்கு வடக்கே இருக்கிற ஜில்லா. கரையோரத்திலுள்ள மங்களூர்தான் இதில் பிரதான பட்டணம். இதில் வர்த்தகமும் நடக்கிறது.

பாஷை.

மலபார் ஜில்லாவில் பேசுகிற பாஷை மலையாளம். தென் கன்னடத்தில் தெற்கே மலையாளமும் நடுவே துளுவபாஷையும் வடக்கே கன்னடமும் பேசுகிறார்கள்.

ஜில்லாக்களில் ஒன்றுக்கொன்று இருக்கும் தாரதம்மியம்.

பரிமாணம்.—ஜமீன்களைச் சேர்க்குமிடத்து விசாகபட்டணம் ஜில்லாதான் எல்லாவற்றிலும் பெரியது. கடப்பை நெல்லூர் கிஷ்ணா ஜில்லாக்கள் பருமனில் அதற்கு இரண்டாவது. சென்னபட்டணம் ஜில்லா, நீலகிரி ஜில்லா, செங்கற்பட்டு ஜில்லா இவைகள்தான் மிகவும் சிறியது.

சீதோஷ்ணஸ்திதி.—தென்கன்னடம், மலபார், சென்னபட்டணம் இந்த ஜில்லாக்களுக்குத்தான் மழை அதிகம். மதுரை, திருநெல்வேலி, கோயம்பத்தூர், பல்லாரி இந்த ஜில்லாக்களுக்கு மழை பூஜ்யம்.

விளைவுகள்.

லோகங்கள். — மலபார் சேலம் ஜில்லாக்களில் இரும்பு கிடைக்கும்; வயநாட்டில் பொன் உண்டு. கர்நூல்ஜில்லாவில் இரத்நக்கற்கள் வெட்டியெடுக்கும் சில கேணிகள் இருக்கின்றன.

தாபரவகைகள். — தஞ்சாவூர், மலபார், கோதாவரி, தென்கன்னடம் இவைகள்தான் நெல் விசேஷித்து விளைவாகிற ஜில்லாக்கள். சோளம், பல்லாரி, கர்நூல், கோயம்பத்தூர் ஜில்லாக்களில் விளைவாகும். கம்பு, கோயம்பத்தூரிலும் தென் ஆற்காட்டிலும் சேலத்திலும் விளைவாகும். கேழ்வரகு, சேலத்திலும் கோயம்பத்தூரிலும் அதிகம். கொள்ளு, கோயம்பத்தூர், பல்லாரி ஜில்லாக்களில் விளைகிறது. புகையிலை, கோயம்பத்தூர், கிஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களில் பயிராகிறது. பருத்தி, பல்லாரி, திருநெல்வேலி, கர்நூல், கிஷ்ணா, கோயம்பத்தூர் ஜில்லாக்களிலும்; அவுரி, தென் ஆற்காடு, நெல்லூர், கடப்பை ஜில்லாக்களிலும் பயிராகிறது.

மிருகவகைகள். — கோதாவரி ஜில்லாவில் எருமைகளும், தஞ்சாவூர் ஜில்லாவில் மாடுகளும், மலபார் ஜில்லாவில் பசுக்களும் யதேஷ்டம். சேலத்தில் வெள்ளாடுகளும் திருநெல்வேலியில் செம்மறியாடுகளும் அதிகம்.

குடிஜனங்கள்.

மதுரை, மலபார், விசாகபட்டணம், தஞ்சாவூர், இந்த ஜில்லாக்களில்தான் ஜனத்தொகை அதிகம். நீல

கிரி, சென்னபட்டணம், தென்கன்னடம், செங்கற்பட்டு, இந்த ஜில்லாக்களில் ஜனத்தொகை கொஞ்சம். சென்ன பட்டணம் நீங்கலாக, தஞ்சாவூர், மலபார், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள்தான் ஜனங்கள் அதிக நெருக்கமானவைகள். நீலகிரி, விசாகபட்டணம், கர்நூல் ஜில்லாக்களில் ஜனநெருக்கம் அதிகம் இல்லை.

பட்டணங்களின் குடித்தோகை.

சென்னபட்டணத்தில் கொஞ்சங்குறைய நாலு லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியில் ஏறக்குறைய 84,000. மதுரையில் 74,000. தஞ்சாவூர், பல்லாரி, சேலம், கள்ளிக்கோட்டை, நாகப்பட்டணம், கும்பகோணம் என்னும் பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய அரைலக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். 20 பட்டணங்களில் 20,000க்கு மேல் 50,000க்குக் கீழ்பட்ட ஜனத்தொகை உண்டு. அவைகளில் முக்கியமானவைகளை பரிமாண ஒழுங்குப்படி பின்வருமாறு குறிக்கலாம். கூடலூர், கோயம்பத்தூர், வேலூர், காஞ்சிபுரம், பாலக்காடு, மசுலிபட்டணம், மங்களூர், விசாகபட்டணம், நெல்லூர்.

சென்னை சமஸ்தானத்தில் இங்கிலீஷ் துரைத்தன ஆதரவுக்குட்பட்ட சுதேசநாடுகள்.

இதில் விசேஷித்தது திருவிதாங்கோடு. இது கன்னி

யாகுமரிக்கு வடமேற்கேயுள்ள நீர்ப்பாய்ச்சலான செழித்த நாடு. நெல், மிளகு, ஏலம், காப்பிக்கொட்டை இவைகள்தான் இதில் முக்கியவிளைவு. ஜனத்தொகை 23 லக்ஷம் என்று கணக்கிடலாம்.

இதில் பிரதானபட்டணமாகிய திருவநந்தபுரம் தெற்கே இருக்கிறது. வடக்கே இருக்கிற கோல்லம் ஒரு ராணுவஸ்தானம். அதற்கு வடக்கே இருக்கிற ஆலப்பள்ளி கடற்றுறைபட்டணம். தெற்கே கன்னியாகுமரிக்குச் சமீபமாய் இருக்கிற குளச்சலிலிருந்து காப்பிக்கொட்டை ஏற்றுமதியாகிறது. நாகர்கோவில் சற்று உள்ளே தள்ளியிருக்கிறது.

கொச்சி என்பது திருவிதாங்கோட்டுக்கும் மலபாருக்கும் நடுவே இருக்கிற சின்னராஜ்யம். இதில் முக்கிய விளைவு அரிசி, தேங்காய், காப்பிக்கொட்டை, மிளகு, ஏலம். காடுகளில் தேக்கு மிகுதி. ராஜா இருக்கிற ஸ்தலம் கொச்சிக்குச் சமீபமாய் இருக்கிற எர்ணகுளம். வடக்கே இருக்கிற திரிச்சூர்தான் எல்லாவற்றிலும் பெரிய பட்டணம்.

திருவிதாங்கோடு கொச்சி இவ்விடங்களில் கழிகள் மிகுதியானபடியால் போக்குவரத்துக்கு மிகவும் அநுகூலமானது. இரண்டிலும் சுதேசகிறிஸ்தவர்கள் அதிகமாய் இருக்கிறார்கள்.

திருவிதாங்கோடு மலபாரைவிட பெரிதாய் இருக்கிறதும் அன்றி அதிக ஜனத்தொகையுள்ளதாயும் இருக்கிறது. கொச்சி

யில் இருப்பவர்கள் திருவிதாங்கோட்டு ஜனத்தொகையில் நாவில் ஒரு பங்கு.

தஞ்சாவூருக்குத் தென்மேற்கே புதுக்கோட்டை என்னும் சிறு ஜமீன் உண்டு. இதற்குத் தலைவன் தொண்டைமான் ராஜா. இதில் விசேஷித்த ஸ்தானம் புதுக்கோட்டை.

ஜெயப்பூர் மாகாணம் விசாகபட்டணம் ஜில்லாவுக்கு வடமேற்கே இருக்கிற விஸ்தாரமான மலைநாடு. இதில் சில காட்டுஜனங்கள் வாசம்பண்ணுகிறார்கள். ஜெயப்பூர் என்னும் சிறுபட்டணந்தான் இதில் முக்கிய ஸ்தனாகிய ஜெயப்பூர் ராஜாவுக்குப் பிரதானஸ்தானம்.

மைசூர்.

இது சென்னபட்டணத்துக்கு மேற்கே தெக்காணச் சேர்ந்த சமனான மேட்டுநிலத்தில் இருக்கிறது. பருமனில் இது சென்னை சமஸ்தானத்தில் ஐந்தில் ஒரு பங்காகும். இதில் பல குன்றுகளின் உச்சியில் துருகங்கள் என்று சொல்லப்பட்ட மலைக்கோட்டைகள் உண்டு. வடபக்கம் துங்கபத்திரை வேகவதி முதலிய கிஷ்ணாவின் உபநதிகள் பாய்கின்றன. தெற்கே காவேரி பாய்கிறது. கேழ்வரகுதான் இதில் முக்கியமான விளைவு. சர்க்கரையும் காய்ச்சுவார்கள். மேல்காத் மலைகளில் காப்பிக்கொட்டை விளைகிறது. பலவித மரங்

களும் உண்டு. இதின் ஜனத்தொகை 50 லக்ஷம். இவர்கள் பேசுகிற பாஷை கன்னடம்.

இது ஒரு மஹாராஜாவின் ஆதீனத்துக்குள் இருக்கிறது. இங்கே ராஜபிரதிநிதியால் ஏற்படுத்தப்பட்ட பிரதான கமிஷனர் உண்டு.

பிரிவுகள்.—கிழக்கே நந்திதுருக்கம், தெற்கே அஷ்டகிராமம், வடக்கே நகரம்.

இதற்குக் கிழக்கே இருக்கிற பேங்களூர்தான் பிரதான கமிஷனர் இருக்கும் ஸ்தானம். இங்கே ஒரு பெரிய ராணுவம் உண்டு. கிழக்கே இருக்கிற கோலார் ஐதர்ஆலி பிறந்த இடம். தெற்கே மைசூரில்தான் மஹாராஜா வசிக்கும் அரண்மனை இருக்கிறது. அதற்குத் தெற்கே காவேரியில் ஒரு தீவில் இருக்கிறது சீரங்கபட்டணம். இதைப் பிடிக்கும் சமயத்தில்தான் திப்புசுல்த்தான் கொல்லப்பட்டான். வடக்கே ஒரு மலைக்கோட்டையின் தென்அடிவாரத்தில் சித்திரதுருக்கம் என்னும் ஓர் ஊர் உண்டு. சிவமோக்க என்னும் ஊர் இதற்கு வடமேற்கே.

குடகு என்பது மைசூருக்கு மேற்கே இங்கிலீஷ்காரரைச் சேர்ந்த நாடு. இதற்கு விசாரணைகர்த்தன் மைசூரிலுள்ள பிரதான கமிஷனர்தான். இது மலைகள் பெருத்த நாடு. காப்பிக்கொட்டையும் ஏலமும் இதில் முக்கிய விளைவானாலும் தானியமும் கொஞ்சம் விளையும். பிரதான பட்டணம் மடிகரி.

பிராஞ்சுக்காரருக்கு சுவாதீனமான நாடுகள்.

இவைகளில் முக்கியமானது புதுச்சேரி. இது கூடலூருக்குச் சமீபமாய்ச் சுற்றி சில மைல்கள் விஸ்தீரணமான துறைமுகம். கோதாவரி தீரத்திலுள்ள ஏனம்பட்டணமும் தரங்கம்பாடிக்குச் சமீபமாயுள்ள காரைக்காலும் மலபார்கரையிலுள்ள மாகியும் இவர்களைச் சேர்ந்த சிறுபட்டணங்கள்.

முக்கிய துறைமுகங்கள்.

கோபால்பூர், பிமுலிபட்டணம், விசாகபட்டணம், கோக்கநாடா, கோரங்கி, நரசப்பூர், மசுலிப்பட்டணம், சென்னபட்டணம், புதுச்சேரி, கூடலூர், பரங்கிப்பேட்டை, தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர், நாகபட்டணம், பாம்பன், தூத்துக்குடி, குளச்சல், ஆலப்பள்ளி, கொச்சி, பேப்பூர், கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, கன்னனூர், மங்களூர் இவைகளே.

நதிதீரத்திலுள்ள பட்டணங்கள்.

கோதாவரி ஆற்றோரமாய் இருக்கிற பட்டணங்கள், ராஜமயேந்திரம், ஏனம், கோரங்கி. கிஷ்ணவுக்கு உபநதியாகிய துங்கபத்திரை ஆற்றோரம், சிவமொக்க, கர்நூல் பட்டணங்கள். கிஷ்ண ஆற்றோரம், பெஜவாடாபட்டணம். வடபெண்ணை ஆற்றோரம், கடப்

லை, நெல்லூர். பாலாற்றோரம், வேலூர், ஆற்காடு; காஞ்சிபுரம், செங்கற்பட்டு. காவேரி ஆற்றோரம், சீரங்கபட்டணம், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், கும்பகோணம். பவானிக்கடல் என்னும் ஊர், பவானியும் காவேரியும் சங்கமமாகும் இடத்தில் உள்ளது. நொய்யலாற்றோரம், கோயம்பத்தூரும், அமராவதி ஆற்றோரம், கருவூரும் உண்டு. இவை இரண்டும் காவேரி ஆற்றின் உபநதிகள். வைகை ஆற்றோரம் இருக்கும் பட்டணங்கள், மதுரை, இராமநாதபுரம். தாம்பிரபரணி ஆற்றோரம் இருக்கிறது திருநெல்வேலிபட்டணம். இதற்குச் சமீபம் பாளையங்கோட்டை.

இருப்புப்பாதையில் அல்லது அதை அடுத்திருக்கும் பட்டணங்கள்.

சென்னை இருப்புப்பாதை.—இது முதலில் மேற்கே அரக்கோணமட்டும் போகிறது. சென்னபட்டணத்திலிருந்து இது 42 மைல்.

அரக்கோணத்திலிருந்து வடமேற்கே பாதை பிரிகிறது. திருப்பதிக்கு அடுத்த றேணுகுண்டாவில் ஒரு பாதை வலது பக்கமாய் நெல்லூருக்குப் பிரிகிறது. றேணுகுண்டாவிற்கு அப்பால் கடப்பையும் குத்தியும் இருக்கின்றன. குத்திக்குச் சமீபமாயிருக்கும் குண்டக்கல்லிலிருந்து ஒரு பாதை இடதுபக்கமாய் பல்லாரிக்கும் இன்னொரு பாதை வலதுபக்கமாய் நந்தியாலுக்கும் போகின்றன. ஆதோணி என்னும் பட்டணம்

குண்டக்கல்லுக்கு அப்பால் வடமேற்கு இருப்புப்பாதையில் இருக்கிறது. நைஜாம் ராஜ்யத்திலுள்ள ரேச்சூரில் வடமேற்கு இருப்புப்பாதை பம்பாயிலிருந்துவரும் இருப்புப்பாதையோடு சேருகிறது.

ரேச்சூர் சென்னபட்டணத்திலிருந்து 350 மைல்.

தேன்மேற்கு இருப்புப்பாதை அரக்கோணத்திலிருந்து தென்மேற்குதிசையை நோக்கிப்போகிறது. பிரதான ஸ்டேஷன்கள் ஆற்காடு, வேலூர், பிறகு ஜோலார்பேட்டை. இங்கேயிருந்து பேங்களூருக்கு ஒரு கிளைப்பாதை பிரிகிறது. ஜோலார்பேட்டைக்குக் கொஞ்சம் தூரத்துக்கப்பால் இருக்கிறது திருப்பத்தூர். அதற்கப்புறம் பெரிய ஸ்டேஷன் சேலம். காவேரிக்குச் சமீபமாயுள்ள ஈரோட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வரும் கிளைப்பாதை தென்மேற்குப் பாதையோடு சேருகிறது. போதனூர் சங்கமத்திலிருந்து ஒரு கிளைப்பாதை கோயம்பத்தூருக்கும் நீலகிரி அடிவாரத்தில் உள்ள மேட்டுப்பாளையத்துக்கும் போகிறது. போதனூருக்கப்பால் கள்ளிக்கோட்டை சேரும்வாயில் பிரதான ஸ்டேஷன் பாலக்காடு. கள்ளிக்கோட்டை சென்னபட்டணத்திலிருந்து 413 மைல்.

தென்இந்தியா இருப்புப்பாதை.—இது சென்னபட்டணத்திலிருந்து தென்மேற்காய்ப் போகிறது. முக்கியஸ்தானங்கள், சைதாப்பேட்டை, பரங்கிமலை, பல்லாவரம், சேங்கற்பட்டு, திண்டிவனம், பிறகு விழுப்

புரம். இங்கிருந்து ஒரு கிளைப்பாதை புதுச்சேரிக்குப் போகிறது. அப்பால் பெரிய பாதையிலுள்ள ஸ்தானங்கள், கூடலூர், பரங்கிப்பேட்டை, சிதம்பரம், சீயாழி, மாயபுரம், கும்பகோணம், தஞ்சாவூர்.

தஞ்சாவூரிலிருந்து ஒரு கிளைப்பாதை கிழக்கே நாகபட்டணத்துக்குப் பிரிகிறது. பெரியபாதை தஞ்சாவூரிலிருந்து மேற்குமுகமாய்த் திருச்சிராப்பள்ளிக்குப் போகிறது. திருச்சிராப்பள்ளியிலிருந்து ஒரு கிளைப் பாதை கருவூர்வழியாய் ஈரோட்டுக்குப் போகிறது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து போகும் பெரியபாதை திண்டுக்கல்லுக்குப் போய், மதுரைக்குப் போகிறது. மணியாச்சியிலிருந்து ஒரு சிறு கிளைப்பாதை திருநேல்வேலிமட்டும் போகிறது. பெரியபாதை தூத்துக்குடிமட்டும் போய் முடிந்துபோகிறது. தூத்துக்குடி சென்னபட்டணத்திலிருந்து 443 மைல்.

அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரத்துக்கு ஒரு சிறு கிளைப்பாதை செங்கற்பட்டுமட்டும் போகிறது.

S. P. C. K. Press, Vepery, Madras. 1888.

பள்ளிக்கூடத் தமிழ்ப் புஸ்தகங்கள்.

முதலாம் வேதோபதேச வினாவிடை, ¼ அணா.
இரண்டாம் ,, ,, ¾ அணா.
பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகள், ௧½ அணா.
புதிய ஏற்பாட்டிலுள்ள கதைகள், ௧½ அணா.
புதிய ஏற்பாட்டுச்சரித்திர வினாக்கள், ௧½ அணா.
பாலர் கீதங்கள், ¼, ௧, ௨ அணா.
முதற்புஸ்தகம், ½ அணா.
இரண்டாம் புஸ்தகம், ௧½ அணா.
மூன்றாம் புஸ்தகம், ௫ அணா.
நான்காம் புஸ்தகம், ௫½ அணா.
மாதர் பூஷணம், ௪ அணா.
ஆத்திசூடி, ½ அணா.
கொன்றைவேந்தன், ½ அணா.
வெற்றிவேற்கை, ½ அணா.
மூதுரை, ½ அணா.
நீதிநெறிவிளக்கம், ௧½ அணா.
நீதிநூற்றிரட்டு முதற்புஸ்தகம், ௧½ அணா.
,, முற்றிலும், ௪ அணா.
,, மூலபாடம், ௧½ அணா.
நூறுகுறள், ௧ அணா.
இலக்கண வினாவிடை முதற்புஸ்தகம், ௧ அணா.
,, ,, இரண்டாம் புஸ்தகம், ௨½ அணா.
பூமிசாஸ்திர சூசனை, ௧¾ அணா.
இந்துதேச சரித்திரம், ௭ அணா.
பூர்வீக லோகசரித்திர சங்கிரகம், ௪ அணா.
எண்சுவடி, ½ அணா.
கணிதம், முதல் வகுப்பு, ௧ அணா.

GEOGRAPHY

OF

THE MADRAS PRESIDENCY.

FOURTH EDITION, 3,000—TOTAL COPIES, 9,000.

சென்னை சமஸ்தானத்தின்

பூமிசாஸ்திரம்.



MADRAS:

THE CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

1888.